**Crl.Misc.39**

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**SHOLINGANALLUR**
**DEPOSITION OF WITNESS**

**Calender :**
**Miscellaneous : CC.No.386/2024**
**Preliminary Register :**
**Police Station : Neelangarai PS**

**Deposition of witness for :LW3/PW3**
**:**

**Name : Vijayakumar**
**:S/o. Ramalingam**

**:**
**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.08.2025**
**(எதிரி ஆஜர் , எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

முதல் விசாரணை **:**

1. நான் ஈச்சம்பாக்கத்தில் வசித்து வருகிறேன். நான் காபி ஷாப் வைத்துள்ளேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எங்கள் வீட்டில் இருந்த விளக்கை திருடியவர். கடந்த 17.6.2018 ஆம் தேதி எங்கள் வீட்டில் புதிதாக கட்டப்படும் வீட்டிற்கு வாசல் நில கால் வைக்கப்பட்டது. மறுநாள் காலை 18.6.2018 அன்று காலை 8:30 மணி முதல் 9 மணி அளவில் நான் புதிதாக கட்டப்படும் வீட்டிற்கு தண்ணீர் விடுவதற்காக சென்ற பொழுது ஒருவர் உள்ளே இருந்து வெளியே கையில் சிமெண்ட் கோணி பையுடன்

வந்ததை பார்த்து நான் தடுத்து நிறுத்தி கேட்ட பொழுது அவர் கையில் இருந்த கோணி பையை பார்த்தபோது அதில் விளக்கு இருந்தது.

2. பின்பு நான் அவசர உதவி 100 க்கு போன் செய்து அவரை பிடித்து வைத்துக் கொண்டேன். பின்பு எனது தாயார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் எதிரியை என் முன்னிலையில் விசாரணை செய்தனர். அவர் தான் எடுத்ததாக ஒப்புக்கொண்டார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அவை அ.சா.ஆ 2 மற்றும் அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. போலீசார் என்னை விசாரணை செய்த பொழுது அவர்களிடம் நான் எத்தனை மணிக்கு சம்பவ இடத்துக்கு சென்றேன் என்ற விவரத்தை கூறினேன். திருடு போன குத்து விளக்கை காவல் நிலையத்தில் இருந்து பெற்றுக் கொண்டோம். நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெறவில்லை என்றால் சரிதான். நான் போட்ட கையெழுத்து காவல் நிலையத்தில் வைத்து தான் செய்தேன் என்றால் சரிதான்.

2. நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் புகார்தாரர் எனது தாயார் என்பதால் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எனது கட்டிடத்தில் வேலை செய்யும் தொழிலாளி என்றாலும் அவருக்கு சம்பளம் பாக்கி தராததால் அவர் மீது பொய்யான புகார் கொடுத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை

Sd/-M.N.ராஜநந்திவர்மசிவா
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
சோழிங்கநல்லூர்.